**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2020**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சிவனைக் குறிக்க மதுரைக்காஞ்சி பயன்படுத்தும் தொடர் யாது?
2. திருமந்திரம் பாடப்பெற்ற தலம் எது?
3. சோழ மன்னன் சேக்கிழார் காலத்தில் விரும்பிப் படித்த காப்பியம் எது?
4. இரட்டையர்களின் இயற்பெயர்கள் யாவை?
5. சீர்காழித் தலபுராணம் யாரால் பாடப் பெற்றது?
6. ஆழ்வார்களுள் ஒரு பெண் ஆழ்வார் யார்?
7. ஞானத்தமிழ் என்னும் சொல் எந்த திவ்யப் பிரபந்தத்தில் உள்ளது?
8. கலியன்–என்னும் திருநாமம் பெற்ற ஆழ்வார் யார்?
9. நம்மாழ்வாரின் பெருமை பேசும் பரணி நூல்கள் யாவை?
10. யாப்பு இலக்கணத்திற்குச் சமணர் தந்த நூல்கள் யாவை?
11. நரிவிருத்தம் எந்த கோட்பாட்டை விளக்க இயற்றப்பட்டது?
12. அறவோர் பள்ளி என்பது எதைக் குறிக்கிறது?

13. மக்கள் தேவர் இரு சாரார்க்கும் ஒத்த முடிவினை உடைய அறம் எது?

14. எளிமையே இறைவன் விரும்பும் கோலம் என்பதை எந்த சிறுகதை உணர்த்துகிறது?

15. இஸ்லாமிய மெய்ஞ்ஞானி மேற்கொள்ளும் ஆன்மீகப் பயணத்தில் முதற்கண் வேண்டுவது எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தேவாரத் தொகுப்பில் பண்முறை தலமுறை என்பன யாவை?
2. முப்பெரும் புராணங்கள் எவை?
3. நாலாயிரத்தை நாதமுனி எத்தனை வகைப்படுத்துகிறார்? அவை யாவை?
4. நம்மாழ்வாரின் அருளிச் செயல்களை எழுதுக.
5. உலகத் தோற்றம் பற்றித் தொல்காப்பியர் கருதுவது யாது?
6. சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய பொய்கைகளில் மூழ்க, கண்ணகி ஏன் மறுக்கிறாள்?
7. இலக்கணங்களை இயற்றுவதில் சமணர் பெரும் ஈடுபாடு கொண்டதற்கான காரணம் யாது?
8. காயசித்தியாவது யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்க இலக்கியத்தில் சிவன் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) சைவ சிற்றிலக்கியங்கள் குறித்து விளக்கி எழுதுக.

2. (அ) திருமாலின் அவதாரங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சங்கம் மருவிய கால இலக்கியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) சமணர்களின் இலக்கணத் தொண்டினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கிறித்துவ சிற்றிலக்கியங்கள் குறித்து எழுதுக.

***